# THE LAW OF INHERITANCE AMONG MUSLIM SOCIETY IN AMPARA DISTRICT

**MCS.Shathifa[1], MY. Minnathul Suheera[2], ARFS. Farwin[3]**
[1,2,3]Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka
*ummunidhaoluvil@gmail.com, suheesafeek@gmail.com, farwinarfs@gmail.com*

**ABSTRACT:** Law of inheritance is an obligation which should be practiced in Islam. However, we can measure that the patterns of inheritance among the muslims in Ampara district is deviant from the basic theories of religion. At the same time it is followed with their traditions .This paper aims to find out the way of inheritance and study whether the practicing law of inheritance among Muslims has the Islamic theoretical basement. And also try to identify reasons for that. The methodology used is mixed approach: Qualitative and Quantitative. The primary data has been collected through questionnaire, interview and observation from the particular Muslim village in Ampara district. These research findings reveal that Islamic law of inheritance is not in practice in the Muslim community in this region. The proper potion for men is not allocated. At the same time the women are provided with more than their allocated potion. There are major eight reasons influencing in the practice. This paper suggests that there should be an awareness of the Islamic Law inheritance and it s important in this society. As well, it further recommends that there should be implementation by the religious institutions and families.

**Key Words:** Law of Inheritance, Muslim society, Practice, Ampara District.

**ஆய்வின் அறிமுகம்:**

வாரிசுச் சொத்துப்பங்குடைமை முஸ்லிம்கள் மீது இறைவனால் விதிக்கப்பட்ட இறை கட்டளையாகும். சொத்துக்கள் என்பது யாது, அவை எப்படிப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், அதனைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் யார்? என்பது போன்ற சொத்துக்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் தெளிவான முறையில் இஸ்லாத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. (Bulbul, 2013).

இஸ்லாமிய கண்ணோட்டத்தில் வாரிசுச் சொத்து எனப்படுவது ஒரு மனிதர் மரணித்ததன் பின்னர் விட்டுச்செல்லும் சொத்துக்களைக் குறிக்கும் (Kareem, , 2011). எனவே இறந்தவரின் சொத்துக்களுக்கே வாரிசுரிமைச் சட்டம் நடைமுறையாகிறது. ‘‘மரணமடைந்த தாய், தந்தையர் விட்டுச்சென்ற சொத்தில் ஆண்களுக்கும் பங்குண்டு(அது போல) தாய், தந்தையர் விட்டுச்சென்ற சொத்தில் பெண்களுக்கும் பங்குண்டு: அச்சொத்து குறைவாகவோ, அதிகமாகவோ இருந்தாலும் சரியே இந்தப் பங்கு அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்டதாகும்’’ (அல்குர்ஆன்- 4:7). இது மரணித்தவரினால் விட்டுச்செல்லப்பட்ட முழுச்சொத்திலிருந்தும் அவரது கடன், மரண சாசனம் போன்ற விடயங்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் எஞ்சிய சொத்துக்களிலிருந்து பங்கிடப்பட வேண்டும் என்பதே இஸ்லாமிய வழிகாட்டலாகும்.‘‘இறந்தவரின் வஸிய்யத் அல்லது கடனைச் செலுத்தியதன் பிறகு அவருக்கு சகோதரர்கள் இருந்தால் அவரது தாய்க்கு ஆறில் ஒரு பங்குண்டு’’ (அல்குர்ஆன் - 4:11).

‘‘இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் மிகுந்த நுண்ணறிவோடு திட்டமிடப்பட்ட ஒன்றாகும்.இது மிகச் சிக்கலான வாரிசுரிமையை பயனுள்ள முறையில் கையாளும் வகையில் அமைந்துள்ளது. இது மிகத் துல்லியமாக தெளிவான விளக்கங்களை முன்வைக்கின்றது’’ (Kareem, 2011).

சொத்துப் பங்கீட்டின் முதல்நிலை முகவராக குடும்பமே அமைகின்றது. ஒரு சமூகத்தின் அடிப்படை அலகாக குடும்பம் அமைந்தள்ளது. இது சமூக, ெபாருளாதார,சமய, பண்பாட்டு விடயங்களை அமுல்படுத்தும் பிரதான இடமாகக் காணப்படுகின்றது. இது

சந்ததி வழியாகக் கடத்தப்பட்டு சமுதாயத்தின் மேற்கட்டுமானத்தில் வெளிப்படையாக காணப்படுகின்றது. எனவேதான் குடும்பத்தின் வழியான சொத்துப் பங்கீட்டை வலியுறுத்தி இறை கட்டளைகள், நபி(ஸல்) அவர்களின் முன்மாதிரிகள் இஸ்லாத்தில் அமைந்துள்ளது. ''….. இது அல்லாஹ்விடம் இருந்து வந்த கட்டளையாகும்'' (அல்குர்ஆன், 4: 11),''இது அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும்'' (அல்குர்ஆன், 4:12),''…. இவை அல்லாஹ்வின் வரையறையாகும்'' (அல்குர்ஆன், 4:13) இதனூடாக சமூகத்தில் சமூக, பொருளாதார சமநிலையைப் பேணவும், சமூக அமைதியை உருவாக்கவும், ஆரோக்கியமான சமூகச் செயற்பாடுகளை நிலைநாட்டவும் சமூக உறுப்பினர்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர். சொத்துப் பங்கீடு தனிமனித, குடும்ப, சமூக மேம்பாட்டின் அடிப்படை என்பதனை இறைவனின் கட்டளையின் முக்கியத்துவத்தின் வழியாக விளங்கிக் கொள்ள முடியும்.

சொத்துப் பகிர்வு தொடர்பான அறிவும், பயிற்சியும் ஒவ்வொரு இஸ்லாமியருக்கும் அடிப்படையானதும், கடமையானதுமாகும்.''யூகத்தின் அடிப்படையில் (வாரிசு நிலை பற்றி) பேசக்கூடியவர்கள் தோன்றுவதற்கு முன்பு மிக முக்கிய அடிப்படைக் கல்வியான பாகப் பிரிவினை கல்வியைக் கற்றுக் கொள்ளுங்கள்''என அபூ உக்பா பின் ஆமிர் (ரழி) குறிப்பிடுகின்றாரகள்.(புகாரி)

சொத்துப்பங்கீடானது குறித்த நபர்களிடையே பகிரப்படும் போது, அது பரம்பரை பரம்பரை ரீதியில் மிகப் பலமான பிணைப்பை ஒருவரில் உருவாக்குகின்றது. ''சொத்துப் பங்கீடுஇஸ்லாத்தில் பரம்பரையை இணைக்கும் ஒன்றாகவும், திருமண பந்தத்தை வலுப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளமை சிறப்பம்சமாகும்'' (Misbaari, 2013). உலக வரலாறுகளில், சமூக வரலாறுகளில், குடும்ப வரலாறுகளில் சொத்துக்கள் அடிமைத்தனங்களையும், கொலைகளையும் உருவாக்கியுள்ளமையைக் காணலாம். இஸ்லாத்தில் அறிவுறுத்தப்பட்டள்ள சொத்துப் பங்கீடு மனித சமூகத்தின் நிலைப்பை வலுப்படுத்துகின்றது. ''வாரிசுரிமை அடிமைத்தனத்தை இல்லாமல் செய்யும் ஒன்றாகவும், ஒருவரை ஒருவர் கொலை செய்வதனைத் தடுக்கும் ஒன்றாகவும், ஒருவரில் இருந்து இன்னொருவருக்கு சொத்து செல்வதனைத் தடுப்பதை உடைக்கும் ஒன்றாகவும் உள்ளது'' ( (Misbaari, 2013)

இச்சொத்துப் பங்கீட்டு முறைமையானது நியாயமான ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் ஆண்களுக்கிடையிலும், பெண்களுக்கிடையிலும் பகிரப்படுவதனை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது. எனினும் முஸ்லிம் சமூகத்தில் குடும்பங்கள் சொத்துக்களை தமக்கிடையே இஸ்லாமிய வரையறைகளைப் பேணியும், பேணாமலும் பகிர்ந்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.(நேர் காணல்,1)

குறிப்பாக அம்பாரை மாவட்ட முஸ்லிம்களிடத்திலும் இந்நடைமுறை காணப்படுகின்றது, இது பெரும்பான்மையாக முஸ்லிம்களைக் கொண்ட மாவட்டமாகும். இந்நடைமுறையினால் குடும்பங்களுக்கிடையே பல்வேறு வகையான பிரச்சினைகள் பல வடிவங்களில் இடம்பெற்று வருகின்றமையைக்காணமுடிகின்றது.

அதேவேளை, இப்பிரதேசத்தில் எதிர்காலத்தில் இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக இஸ்லாமியப் பண்பாட்டில் அக்கறை கொண்ட பல அமைப்புக்கள் இஸ்லாமிய சொத்துப் பங்கீட்டுமுறையைஅமுல்படுத்தும் நடைமுறைகளை பல்வேறு வடிவங்களில் செயற்படுத்தியும் முன்னெடுத்தும் வருகின்றன.எனினும் இது தொடர்பான ஆய்வுகள் இப்பிரதேசத்தில் சமூகவியல் கண்ணோட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இப்பிரச்சினைகளை சமூகவியல் கண்ணோட்டத்தில் ஆராய வேண்டிய தேவைப்பாட்டுக்கான கேள்வி அதிகரித்து வருவதனால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

### ஆய்வின் இலக்கு:

அம்பாரை மாவட்ட முஸ்லிம் சமூகத்தில் நிலவுகின்ற சொத்துப் பங்கீட்டு முறைகள், இஸ்லாமிய சொத்துப்பங்கீட்டை மையப்படுத்தி அமைந்துள்ளதா? என்பதனையும் அதற்கான காரணங்களையும் அடையாளங் காணல்.

**ஆய்வுப் பிரதேசம்:**
அம்பாரை மாவட்டத்தில் பதினொரு முஸ்லிம் கிராமங்களிலும் சொத்துப் பங்கீட்டு முறைகள் காணப்படுகின்றன. அவற்றில் இப்பிரதேசங்களில் காணப்படும் பொதுப்பண்புகளின் அடிப்படையில் இவ்வாய்வுக்கு நிந்தவூர் பிரதேசம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆய்வு வரையறை:**

இஸ்லாமிய சொத்துப் பங்கீட்டு விதிமுறைக்கேற்ப, மொத்தமாக இருபத்து ஐந்து பேர் வாரிசுச் சொத்தில் பங்கு பெறும் தகுதிக்குள் உள்ளடக்கப்படுகின்றனர். இவர்களில் கணவன், மனைவி, மகன்,மகள், கணவரின் தாய், கணவரின் தந்தை, மனைவியின் தாய், மனைவியின் தந்தை ஆகியோர் பிரதான பங்குகளைப் பெறுகின்றனர். ஏனைய பதினேழுபேர் மிகக் குறைந்த பங்குகளைப் பெறுவோராகவும், சில சந்தர்ப்பங்களில், பங்குகளைப் பெறுவோர் வரிசையில் அவர்களுக்கு சொத்துப் பங்குகள் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவும் காணப்படுகின்றது. இந்தவகையில் சொத்துக்கள் 'தள்ளல் விதிக் கொள்கையை மையப்படுத்தி (Doctrine of Exclusion) கிடைக்கும் சொத்தில் பகுதி அளவு பங்குபெறும் வகையினருள் (Partial Exclusion) கணவன், மனைவி ஆகிய இருவரும் முதல்நிலை வகிக்கின்றனர். இவர்களே சொத்துப் பங்கீட்டில் அதிகளவு சொத்துக்களைப் பெறும் பிரிவினராகக் காணப்படுகின்றனர்.

எனவே இவ்வாய்வுக்கு கணவன், மனைவி ஆகிய இருவரினதும் சொத்துப்பங்கீட்டு முறைகள் ஆய்வு உள்ளடக்கம், ஆய்வுப் பிரதேசம், ஆய்வுக்காலம் போன்றவற்றை மையமாகக் கொண்டு வரையறை செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வு பின்வரும் வகையில் சொத்தில் பங்குபெறுவோரை உள்ளடக்கியுள்ளது.

***ஆய்வுக்காக உள்வாங்கப்பட்ட பகுதியளவு பங்குபெறுவோர் அட்டவணை***

| ***பங்குதாரர்கள்*** | ***கூடுதல் பங்கு*** | ***குறைந்த பங்கு*** |
|---|---|---|
| கணவன் | 1/2 | 1/4 |
| மனைவி | 1/4 | 1/8 |

**ஆய்வு முறையியல்:**
இவ்வாய்வானது முதற்தர, இரண்டாம் தர தரவுகளை உள்ளடக்கி, தரம்சார், பண்புசார் ஒப்பட்டு ஆய்வு முறைமையினைப் பயன்படுத்துகின்றது. இதில் முதலாம் நிலைத் தரவுகள் ஆய்வுப் பிரதேசத்தில் இருந்து 100 தனிநபர்களிடம் வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களிலிருந்தும், சமூக ஆர்வலர்கள் 10பேருடனான நேர்காணல், ஆய்வாளர்களின் அவதானம் என்பவற்றினூடாகப் பெறப்பட்டன.
இரண்டாம் நிலைத் தரவுகள் ஆய்வுக் கட்டுரைகள், புள்ளி விபரங்கள், நூல்கள் மூலம் பெறப்பட்டன.
குடும்பங்களில் சொத்துப் பங்கீட்டை அளவிட வாரிசுரிமைச் சட்டங்கள் தரக் கணிப்பீட்டு அளவிடையாகப் பயன்படுத்தப்பட்டன.

**இலக்கிய மீளாய்வு:**

Feroza Bulbul ன், 'Implication of Islamic Law of Inheritance: Ultimate Solution to family conflict" எனும் ஆய்வில், பங்களாதேஷில் நிலவுகின்ற சொத்துப் பங்கீட்டு முறைகளின் செல்வாக்குப் பற்றி விளக்குகின்றார். பெரும்பாலான குடும்பங்கள் (68%) சொத்துப் பங்கீட்டில் இஸ்லாமிய சட்ட முறைகளைப் பின்பற்றி வருகின்றன. இருப்பினும் 32% மான

குடும்பங்களில் நிலவும் முறையற்ற சொத்துப் பங்கீடு குடும்ப வன்முறைகளை உருவாக்குகின்றது. இக்குடும்பங்களிடையே இஸ்லாமிய சொத்துப் பங்கீடு தொடர்பான தெளிவான அறிவின்மை இதற்குக் காரணம் என்பதனை அடையாளப்படுத்துகின்றார். (Bulbul, 2013)

"Islamic Real Estate management: Review of Issues and challenges in managing inheritance property in Malaysia" Fazira Shafie at. al 2014 மேற்கொண்ட ஆய்வு மலேசியாவில் சொத்துக்களை இஸ்லாமிய சொத்துப் பங்கீட்டு அடிப்படையில் பங்கீடு செய்து கொடுக்கும் முறையானது நிர்வாகக் கட்டமைப்பு சார்ந்து இயங்குகின்றது. இங்கு நிர்வாக ரீதியாக சொத்துக்களைப் பகிர்ந்தளிப்பதில் தாமதமாகும் நிலை காணப்படுகின்றது என்றும், சொத்துக்கள் இவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுவதனால் ஏனைய குடும்ப, சமூக பிரச்சினைகள் உருவாவதில்லை என்பதனையும் சுட்டிக் காட்டுகின்றது. மேலும் இத்தகைய நடைமுறை நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தியும் வருகின்றது. (Fazira Shafie, 2014)

'இலங்கையில் முஸ்லிம் குடும்பச் சட்டம்' தொடர்பான நூல் முஸ்லிம் மக்களிடையே நடைமுறைப்படுத்தப்படும் சொத்துக்களின் செயல்முறைகளையும், முஸ்லிம் தனியார் சட்டத்தின் நிலைப்பாடுகளையும் பற்றி விளக்குகின்றது. முஸ்லிம் தனியார் சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் சொத்துக்களின் பங்கீடுகள் பற்றி தெளிவான விளக்கங்களை வழங்கவில்லை என்பதனை வலியுறுத்துவதாக அமைகின்றது. அந்நூல் முஸ்லிம் மக்களிடையே காணப்படும் சொத்துப் பங்கீடு தொடர்பாகக் காணப்படும் சிக்கல்களை ஆழமாகப் பேசவில்லை. (Kodikara, 2009)

## ஆய்வு மையம்: (தரவுப் பகுப்பய்வும் முடிவுகளும்):

### தரப்பகுப்பாய்வு:


ஆய்வின்போது பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்தபோது பின்வரும் முடிவுகள் அடையாளப்படுத்தப்பட்டன.

**<u>இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்ட அடிப்படையில் கணவன் வாரிசுப்பங்கு பெறும் சந்தர்ப்பங்களும், சமூதாய நடைமுறைகளும்:</u>**

**இஸ்லாமிய சட்ட <u>சந்தர்ப்பம்-01: ½ பங்கு</u>**

a) **சட்ட சந்தர்ப்பம்:** இறந்துபோன மனைவிக்கு கணவன் மூலம் அல்லது வேறு கணவன் மூலம் பிள்ளைகள் இல்லாது, அவளது தந்தையுடன் பிறந்த சகோதரன் இருப்பின் கணவனுக்கு சொத்தில் ½ பங்கும், மீதி தந்தையுடன் பிறந்த சகோதரனுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும்.


**சமுதாய நடைமுறைகள்:** கணவனுக்கு ½ பங்கு வழங்கும் செயன்முறை குடும்பங்களில் நடைமுறையில் இல்லை. அத்தடன் மிகுதி ½ பங்கு தந்தையுடன் பிறந்த சகோதரனுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நடைமுறையும் குடும்பங்களில் பின்பற்றப்படவில்லை. பெரும்பான்மையாக மனைவியின் சகோதர, சகோதரிகளிடையே சொத்துக்கள் பங்கீடு செய்யப்படுகின்றது. 98.33 வீதமானவர்கள் கணவருக்கு சொத்து இஸ்லாமிய விதிகளின் படி வழங்கப்படுவதை விரும்பவில்லை. 1.67 வீதமானவர்கள் அங்கீகரிக்கின்றனர்.




காரணம்: கணவன் மனைவியிடையே காணப்படும் சொத்துக்கள் பெரும்பான்மையாக மனைவியின் வழியாக வந்தடைந்ததாகவே காணப்படுகின்றன. இதனால் மனைவியின் இறப்புக்குப் பின்னர் சொத்தினைப் பெறும் அதிகாரத்தை மனைவி சார்ந்த உறவுகள் பெறுகின்றன.

b) **இஸ்லாமிய சட்ட சந்தர்ப்பம்:** மனைவி இறந்த சந்தர்ப்பத்தில் கணவரின் தாயும், தந்தையும் உயிருடன் உள்ள சந்தர்ப்பத்தில், சொத்து 06 பகுதிகளாகப் பங்கிடப்பட்டு 03 பங்கு கணவருக்கும், 02 பங்கு தாய்க்கும், 01 பங்கு தந்தைக்கும் வழங்கப்படவேண்டும்.


**சமுதாய நடைமுறை:** கணவரின் தாயும், தந்தையும் உயிருடன் உள்ள சந்தர்ப்பத்தில் கணவரின் தாய் தந்தைக்கு சொத்தில் பங்கு வழங்கப்படும் முறை நடைமுறையில் இல்லை. கணவரின் வழியாக வந்த சொத்தாக இருப்பின் அதனை மட்டும் கணவர் 100% தனக்கானதாக எடுத்துக் கொள்கின்றார். கணவருக்கு இருந்த சொத்துக்களும் தாய், தந்தைக்குச் செல்லாமல், கணவரின் சகோதரர்கள், சகோதரிகள் பிரித்தெடுத்துக் கொள்ளும் வழமை காணப்படுகின்றது. . 93.33 வீதமானவர்கள் கணவருக்கு சொத்து இஸ்லாமிய விதிகளின் படி வழங்கப்படுவதை விரும்பவில்லை. 6 வீதமானவர்கள் தாய்க்கு வழங்கப்படுவதனை அங்கீகரிக்கின்றனர். தந்தைக்கு 0.67வீதமானவர்கள் பங்குகளை வழங்க அங்கீகரிக்கின்றனர்.




**இஸ்லாமிய சட்ட சந்தர்ப்பம் - 02: ¼ பங்கு பெறுதல்**


a) **இஸ்லாமிய சட்ட சட்ட சந்தர்ப்பம்**: கணவனும், மகனும் இருக்க மனைவி இறந்துவிடின், சொத்து 04 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 01 பங்கு கணவனுக்கும், 03 பங்கு மகனுக்கும் வழங்கப்படல்.

**சமுதாய நடைமுறை**: மகனுக்கு 99% சொத்து நேரடியாக தந்தை உயிருடன் இருக்கும்போதே சென்றடைகின்றது. மகன் தன்னுடைய பிள்ளைகளுக்கு அவற்றைப் பிரித்து வழங்குகின்றார். இதனால் கணவனுக்கு சொத்து பங்கிடப்படுவதில்லை.





b) **இஸ்லாமிய சட்ட** சந்தர்ப்பம்: மற்றுமொரு சந்தர்ப்பத்தில் மகனின் மகன் இருக்க மனைவி இறந்துவிடின், கணவனுக்கு ¼ பங்கும், மகனின் மகனுக்கு ¾ பங்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சமுதாய நடைமுறை: மகனின் மகன் இருப்பின் அவருக்கு 100% மாக சொத்து பரிமாறப்படுகின்றது கணவருக்கு சொத்த வழங்கப்படுவது குடும்பங்களில் மிக அரிதாகவுள்ளது.





c) **இஸ்லாமிய சட்ட சந்தர்ப்பம்**: மற்றமொரு சந்தர்ப்பத்தில் மகனின் மகள் இருக்க மனைவி இறந்து விடின், கணவனுக்கு ¼ பங்கும், மகனின் மகளுக்கு 2/4 பங்கும் நிர்ணயிக்கப்படுகின்றது.

**சமுதாய நடைமுறை**: முழுமையாக மகனின் மகளுக்கு சொத்து பரிமாறப்படுகின்றது. தந்தைக்கு சொத்தில் எதுவிதப் பங்குகளும் வழங்கப்படுவதில்லை.




d) **இஸ்லாமிய சட்ட சந்தர்ப்பம்**: கணவனும், மகனும், மனைவியின் தந்தையும் இருக்கும் சந்தர்ப்பத்தில் சொத்தில் ¼ பங்கு பெறக் கணவர் தகுதி பெறுகின்றார்.

**சமுதாய நடைமுறை:** மகனுக்கே பெரும்பகுதி சொத்து சென்றடைகின்றது. கணவருக்கும், தந்தைக்கும் சொத்தில் பங்கு கிடைப்பது குறைவு.





**<u>இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்ட அடிப்படையில் மனைவி வாரிசுப்பங்கு பெறும் சந்தர்ப்பங்கள் , சமூதாய நடைமுறைகளும்:</u>**

**இஸ்லாமிய <u>சந்தர்ப்பம்-01: ¼ பங்கு</u>**


a) **சட்ட சந்தர்ப்பம்**: இறந்து போன கணவனுக்கு இந்த மனைவி மூலமாகவோ அல்லது வேறு மனைவியரின் மூலமாகவோ குழந்தைகள் ஏதும் இல்லாதுவிடின், அல்லது ஆண்வழிச் சந்ததிகள் யாரும் இல்லாதுவிடின், கணவன் விட்டுச் சென்ற சொத்தில் மனைவிக்கு ¼ பாகம் வழங்கப்பட வேண்டும்.

**சமுதாய நடைமுறை**: கணவனின் சொத்து முழுமையாக மனைவியின் பொறுப்பின் கீழ் கொண்டுவரப்படுகின்றது. பின் அவரது விருப்பின் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.





**b) இஸ்லாமிய சட்டசந்தர்ப்பம்**: மனைவியும், கணவனின் உடன்பிறந்த சகோதரரும் மாத்திரமே உள்ள போது, மனைவிக்கு ¼ பங்கு கொடுக்க வேண்டும்.

**சமுதாய நடைமுறை:** மனைவிக்கு முழுமையாக சொத்து சென்றடைகின்றது. உடன்பிறந்த சகோதரர்கள் இங்கு கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. மனைவியின் மரணத்திற்கு பின்னர், அல்லது முன்னர் சொத்துப் பிரிப்பு பிரச்சினைக்குரியதாக மாறுகின்றது, மனைவி இறந்தபின்பு கணவரது உடன் பிறந்தவரை முழுமையாகச் சென்றடைகின்ற வழமை நிலவுகின்றது.





**c) இஸ்லாமிய சட்ட சந்தர்ப்பம்**: மனைவி, கணவனின் தாயும், தந்தையும் உள்ள போது சொத்தை 12 பாகங்களாகப் பிரித்து மனைவிக்கு ¼ பங்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

**சமுதாய நடைமுறையில்:** மனைவிக்கே சொத்து முழுமையாகக் கிடைக்கின்றது.





**இஸ்லாமிய சட்ட சந்தர்ப்பம்-02: 1/8 பங்கு**

a) **இஸ்லாமிய சட்ட சந்தர்ப்பம்:** மனைவியும், மகனும் இருக்கும் சந்தர்ப்பத்தில் சொத்தை 08 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு 1/8 பங்கிற்கு மனைவி உரித்துடையவராகின்றார்.
**சமுதாய நடைமுறை:** மனைவிக்கு எதுவிதப் பங்குகளும் கிடைப்பதில்லை. பெருவாரியாக சொத்து மகனுக்கு உரித்தாக வழங்கப்படுகின்றது.





b) **இஸ்லாமிய சட்ட சந்தர்ப்பம்:** மனைவி, மகன், மகள் உள்ள சந்தர்ப்பத்தில் சொத்தை 24 பங்குகளாகப் பிரித்து 1/8 பங்குக்கு மனைவி உரித்துடையவராகின்றார்.
**சமுதாய நடைமுறை:** மனைவிக்கு எதுவிதப் பங்குகளும் கிடைப்பதில்லை. மகளுக்கு சொத்தில் குறிப்பிட முடியாத அளவில் பெரும்பகுதிப் பங்கும், மகனுக்கு சிறியளவுப் பங்கும் வழங்கப்படுகின்றது.




c) **இஸ்லாமிய சட்ட சந்தர்ப்பம்**: மனைவி, தாய், தந்தை, மகன் உள்ளபோது சொத்தை 24 பகுதிகளாகப் பிரித்து 1/8 மனைவிக்குக் கிடைக்கச்செய்யப் பணிக்கின்றது.

**சமுதாய நடைமறையில்:** மகனுக்கே பெருமளவில் குடும்பத்தில் சொத்து வழங்கப்படுகின்றது. மனைவிக்கு குறைந்தளவில் வழங்கும் நடைமுறை மிகக் குறைந்த குடும்பங்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது.




**காரணங்கள் தொடர்பான பகுப்பாய்வு:**

எத்தகைய காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இப்பிரதேசத்தில் சொத்துப் பங்கீடு நடைமுறையில் காணப்படுகின்றது? என்பதனை அடையாளம் காணும் வகையில் வழங்கப்பட்ட வினாக்கொத்து, நேர்காணல் வழியாகப் பின்வரும் தகவல்கள் பெறப்பட்டன.

| இலக்கம் | காரணங்கள் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| 1 | இஸ்லாத்தின் சொத்துப் பங்கீடு உள்ளது என்பது பற்றிய தகவல் உங்களுக்குத் தெரியுமா? | 97% | 1% |
| 2 | சொத்துப் பங்கீட்டு முறைபற்றிய தெளிவு உங்களுக்கு உள்ளதா? | 24% | 75% |
| 3 | இஸ்லாமிய சொத்துப் பங்கீட்டு முறைபற்றிய தெளிவை குடும்பம் வழங்கியுள்ளதா? | 5% | 91% |
| 4 | இஸ்லாமியசொத்துப் பங்கீட்டு முறைபற்றிய தெளிவை சமய நிறுவனங்கள் வழங்கியுள்ளதா? | 9% | 89% |
| 5 | இஸ்லாமிய சொத்துப் பங்கீட்டை நடைமுறைப்படுத்த சமய நிறுவனங்கள் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிக்கின்றதா? | 5% | 95% |
| 6 | பரம்பரையாக வழிவருகின்ற பங்கீட்டு முறைகளைப் பின்பற்றுகின்றீரா | 92% | 8% |
| 7 | சொத்துப் பங்கீட்டில் சீதன நடைமுறை செல்வாக்குச் செலுத்துகின்றதா | 96% | 4% |
| 8 | சொத்துப் பங்கீட்டில் தாய்வழி அதிகாரம் செல்வாக்குச் செலுத்துகின்றதா? | 90% | 7% |

**கண்டுபிடிப்புக்கள்:**

இவ்வாய்வின் மூலம் பின்வரும் விடயங்கள் கண்டுபிடிப்பாக முன்வைக்கப்படுகின்றது.

1. இப்பிரதேசத்தில் மக்களிடையே இஸ்லாமிய வரையறைகளுக்குப் புறம்பான சொத்துப் பங்கீட்டு முறை பின்பற்றப்படுகின்றது.
2. சொத்துப் பங்கீட்டில் ஆண்களுக்கான பங்குகள் மிகக் குறைவாகக் கிடைக்கின்றது. பெரும்பாலும் சொத்தில் பங்குகள் கிடைப்பது அரிதாகவே காணப்படுகின்றது. அதேவேளை பெண்களுக்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சொத்துப் பங்கீடுகள் விதிக்கப்பட்ட அளவை விடக் கூடுதலாகக் கிடைக்கின்றது.
3. 'இஸ்லாத்தில் சொத்துக்கள் பங்கிடப்படும் விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன' என்ற தகவல் மக்களிடையே மிகத்தெளிவாகக் காணப்படுகின்றது. இருப்பினும், சொத்துப் பங்கீடு தொடர்பான தெளிவான விளக்கங்கள் மக்களிடையே மிகக் குறைவாக உள்ளது. இவற்றை தெளிவுபடுத்துவதில் குடும்பம், சமய நிறுவனத்தின் பங்கு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் சமயநிறுவனம் அவற்றை நடைமுறைப்படுத்தும் வகையில் இறுக்கமான விதிகளை செயற்படுத்துவதில் பின்தங்கியுள்ளது. இவ்வாறான காரணங்களால் மக்கள் தமது பாரம்பரியமான பழக்கவழக்கங்கின் படி தமது சொத்துக்களைப் பங்கீடு செய்கின்றனர். பாரம்பரியமான முறையில் சொத்துக்கள் பகிர்ந்தளிக்கும் போது பெண்களுக்கே அதிகளவிலான சொத்துக்கள் சென்றடைகின்றன. இதற்கு இப்பிரதெசத்தில் காணப்படும் சீதன நடைமுறை செல்வாக்குச் செலுத்துகின்றது.
4. இத்தகைய காரணங்கள் ஒன்று ஒன்றுடன் இணைந்த வகையில் இப்பிரதேசத்தில் செயற்படுகின்றது. இவை இப்பிரதேச சொத்துப் பங்கீட்டு நடைமுறைக்கான காரணங்களாகவுள்ளன.

**விதந்துரைப்பு:**

இஸ்லாமிய ஷரீஆவில் தெளிவுபடுத்தப்படதன் பிரகாரம் , சொத்துப் பங்கீட்டு முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை குடும்பம், சமயநிறுவனம் போன்றன காத்திரமான முறையில் முன்னெடுக்கவேண்டும். அவ்வாறு முன்னெடுக்கப்படும் போதுதான் இஸ்லாமிய சொத்துப் பங்கீட்டு நடைமுறையினை இப்பிரதேசத்தில் அமுற்படுத்த முடியும்.

## Bibliography


Bulbul, A. (2013). Implication of Islamic Law inheritance: Ultimate solution to family conflict. *Asian Journal of Applied science and Engneering* , 118-128.

Fazira Shafie. (2014). Islamic Real Estate management: Review on issues and challenges in manageing inheritance in Malaesiya. *rasearch gate* , 1-8.

Kareem, M. A. (2011). *Islathil Varisurimai Sattam.* Colombo: Nahdha .

Kodikara, S. (2009). *Muslim Family law in SriLanka.* Colombo: Muslim Research Forum.

M.Misbaari. (2013). *Muslim propoety law.* Chennai: Sajith Book Center.

MY.Misbahi. (2013). *Islamiya Warisurimai Chattankal.* India: Sajith Book Cenyter.